**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.146/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | திருநாவுகரசு | த–பெ /க.பெ. | துரைராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2026**

-------------------------------------------------------------------------------------------------

**18.06.2026**

**குறுக்கு விசாரணை:**

1) எனக்கு எந்ததனை வங்கிகளில்கணக்கு உள்ளது என்றால் 5 ஆகும். 5 வங்கிகளிலும் நான் காசோலை பயன்படுத்துவேன் என்றால் சரிதான். காரைக்குடியில் உள்ள அலகாபாத் வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் இல்லை. 5 வங்கிகளில் கணக்கு வைத்துள்ளதால் எனக்கு வங்கி தொடர்பான விபரங்கள் தெரியும் என்றால் சரியல்ல. 2022ல் அலகாபாத் வங்கி இந்தியன் வங்கியுடன் இணைக்கப்பட்டது என்றாலும், தற்போது அலகாபாத் வங்கி இயக்கத்தில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு என்னை நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதிரி என்னிடன் எந்த ஒரு கடனும் பெறவில்லை என்றாலும், எந்த ஒரு காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 வழக்கு காசோலை எதிரியின் காசோலை இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல, எனது முன்புதான் கையொப்பம் செய்து காசோலை கொடுத்தார்.

2) எதிரி அலகாபாத் வங்கியில் கணக்கு வைக்கவில்லை என்றாலும், அலகாபாத் வங்கியின் அலுவலரை விசாரித்ததால் உண்மை தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அவரது காசோலை என்று என்னிடம் கொடுத்தார். ம.சா.ஆ.1 கையொப்பத்தில் தண்ணீரால் அழித்து கையொப்பம் நிபுனருக்கு அனுப்ப முடியாத படி material alteration செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி வழக்கு காசோலையில் கையொப்பம் செய்யாததால் அவர் அவரது தரப்பு நிரூபிக்க தேவையில்லை என்றால் சரியல்ல. அலகாபாத் வங்கி மேனேஜரை சாட்சியாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவரை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக உள்ளேன். வழக்கு காசோலை எதற்காக திருப்பப்பட்டது என்றால் valid இல்லை என்று சொல்லி திரும்பியுள்ளதாக வங்கியில் இருந்து என்னிடம் கூறினர். Non CTS காசோலை தற்போது நடைமுறையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல வங்கியில் இருந்து வழக்கறிஞர் மூலம் பார்த்துக்கொள்ளும்படி கூறினர். ஜூலை 9, 2010 முதல் Non CTS காசோலை உபயோகத்தில் இல்லை என்றாலும் அப்போதே RBI ஆல் தடைசெய்யப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது நடைமுறையில் உபயோகத்தில் இல்லாத காசோலையை வைத்து எதிரிக்கு எதிராக பொய்யாக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார். வழக்கு காசோலை எதிரியின் காசோலை இல்லை என்றாலும், எதிரி மீது மாற்றுமுறை ஆவணம் சட்டத்தின் கீழ் புகார் கொடுக்கமுடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் கையொப்பம் இடவில்லை என்றாலும், நானே கையொப்பம் செய்து தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலை எதிரி ஜாகிர் உசேன் என்னிடம் கொடுத்ததில்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.18 17:44:06 +0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.